# THE NEWS GALLERY

## BEYOND HEADLINES


## தலைப்புச் செய்திகளுக்கு அப்பால்




# கண்காட்சி வழிகாட்டி

NLB | National Library Singapore

# கண்காட்சி அமைப்பு முறை




1. ஆரம்பகாலப் பதிப்புகள்
2. ஒவ்வொரு கதைக்குப் பின்னால்
3. மெய்யா பொய்யா?
4. கூடியத் தகவல்கள்!
5. அனைத்தும் வாசித்து அறியலாம்
6. தலைப்புச்செய்தியில் இடம்பெறுங்கள்!

# THE NEWS GALLERY
## BEYOND HEADLINES

Current display of early newspapers


THE STRAITS TIMES.
AND SINGAPORE JOURNAL OF COMMERCE.
VOL. 1st FOR THE WEEK ENDING TUESDAY MORNING AUGUST 5th 1845 NO. 4

THE STRAITS TIMES.

AN AYAH.

FOR SALE.

TO BE LET.

SINGAPORE DISPENSARY.

FOR LONDON.

FOR LONDON.

FOR LONDON.

CAMPONG GLAM DISPENSARY.

TO LET

FOR SALE.

FOR SALE.

JUST RECEIVED.

FOR SALE. AT THE SHOP OF CURSETJEE & CO

EASTERN STEAM COMPANY

NOTICE


### *The Straits Times, and Singapore Journal of Commerce*
5 August 1845
Singapore: Straits Times Press

*The Straits Times* was first published on 15 July 1845 as *The Straits Times, and Singapore Journal of Commerce*, an eight-page weekly newspaper. The paper covered local and foreign news, as well as commercial and shipping information.

*The Straits Times* diterbitkan buat pertama kali pada 15 Julai 1845 sebagai *The Straits Times, and Singapore Journal of Commerce*. Akhbar mingguan setebal lapan muka surat ini menyajikan berita dalam dan luar negara serta maklumat perdagangan dan perkapalan.

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் செய்தித்தாளும், சிங்கப்பூர் ஜர்னல் ஆப் காமர்ஸ் என்ற எட்டுப் பக்க வாராந்திர செய்தித்தாளும் 1845-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் தேதி தொடங்கப்பட்டன. இவ்விரு பத்திரிகைகளும் உள்ளூர், வெளியூர் செய்திகளையும், வர்த்தகம், கப்பல் போக்குவரவு, கடல் வாணிபம் முதலான செய்திகளையும் வெளியிட்டன.

《海峡时报》于 1845 年 7 月 15 日首次出版。当时该报的原名为《海峡时报与新加坡商务期刊》，是一份共八页的周报。该报报道了本地和海外新闻，以及与商务和航运方面有关的资讯。



சிங்கைநேசன்.

Vol. 2] 1888 [No. 9

Subscription in Advance.

Market Price.

Bombay Dispensary.

Dr. K. C. HEERJEE,

Advertisement Rates.

Correspondence Rates.

Netherlands Trading Society.

Netherland Trading Society.

சிங்கைநேசன்.

## *சிங்கை நேசன*

### *(Singai Nesan)*

3 September 1888
Singapore: Denodaya Venthira Press

*Singai Nesan* (Singapore Friend) is one of Singapore's earliest Tamil-language news journals, first produced for the Tamil diaspora. The weekly newspaper featured happenings in Southeast Asia and Tamil-speaking countries such as India and Sri Lanka. Publication of *Singai Nesan* ceased in 1890 due to little support.

*Singai Nesan* (Rakan Singapura) merupakan antara akhbar Tamil yang terawal di Singapura. Dihasilkan untuk diaspora Tamil, akhbar mingguan ini melaporkan kejadian di Asia Tenggara dan negara-negara di mana bahasa Tamil digunakan seperti India dan Sri Lanka. Penerbitan *Singai Nesan* dihentikan pada tahun 1890 kerana kurang sambutan.

புலம்பெயர் தமிழர்களுக்காக சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட சிங்கை நேசன், தமிழில் வெளிவந்த ஆரம்பகால செய்தித்தாள்களில் ஒன்றாகும். இந்த வாரப்பத்திரிகையில் தென்கிழக்காசியா, தமிழ் பேசும் மக்கள் வாழும் இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற நாட்டுச் செய்திகள் இடம்பெற்றன. 1890-ஆம் ஆண்டு போதிய ஆதரவு இல்லாமல் சிங்கை நேசன் பத்திரிகை நிறுத்தப்பட்டது.

**原为淡米尔侨民出版的《新加坡之友》是新加坡最早的淡米尔文新闻报章之一。该周报报道了东南亚和其他淡米尔族群居住的国家如印度和斯里兰卡的消息。因缺乏支持，该报于 1890 年停刊。**


E. O. Gammeter & Co.
16, Collyer Quay.
GULL BAHAR HAIR OIL
TAJMUL HUSSAIN
"REBAIL"
Ayurveda Siddha Oushada Sala.
171-A, Selegie Road. Singapore.
NIPPON BAIKU KAISHA & Co. LTD.
No. 49, 51, North Bridge Road.
Singapore.

## *Warta Malaya*

22 and 24 July 1933
Singapore: Syed Hussein bin Ali Alsagoff

*Warta Malaya* was first published on 1 January 1930. Written in the Jawi script, the newspaper championed Malay interests in education, economic development and political rights. An important voice on the community's affairs, it was the first Malay-language newspaper to be distributed beyond Malaya.

*Warta Malaya* pertama kali diterbitkan pada 1 Januari 1930. Ditulis dalam aksara Jawi, akhbar ini memperjuangkan kepentingan masyarakat Melayu dalam bidang pendidikan, pembangunan ekonomi dan hak politik. Suara lantang yang membincangkan ehwal masyarakat, ia merupakan akhbar Bahasa Melayu pertama yang diedarkan ke luar Malaya.

ஜாவி மொழியில் வர்தா மலாயா என்ற பத்திரிகை 1930-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி வெளிவந்தது. மலாய்க்காரர்களின் அக்கறைக்குரிய அம்சங்களான கல்வி, பொருளாதார வளர்ச்சி, அரசியல் உரிமைகள் ஆகியவற்றில் அது கவனம் செலுத்தியது. மலாய் சமூகத்தின் குரலாக விளங்கிய இப்பத்திரிகைதான் முதன்முதலில் மலாயாவிற்கும் அப்பால் வினியோகிக்கப்பட்ட மலாய் மொழி செய்தித்தாளாகும்.

《马来亚报》于1930 年 1 月 1 日首次出版。该报以爪夷文书写，倡导马来族群在教育、经济和政治方面的权益。 该报是马来族群重要的发声管道，也是第一份在马来亚以外发行的马来文报纸。



## *星洲日报*
## *(Sin Chew Jit Poh)*

20–21 February 1957
Singapore: Sin Chew Jit Poh

*Sin Chew Jit Poh* was first published on 15 January 1929 by businessman Aw Boon Haw to advertise his Tiger Balm products. One of Singapore's leading Chinese dailies, it promoted patriotic sentiments towards China and the *Kuomintang* (Chinese Nationalist Party), with the latter's leader Chiang Kai-shek writing the masthead for its inaugural issue.

*Sin Chew Jit Poh* mula diterbitkan pada 15 Januari 1929 oleh ahli niaga Aw Boon Haw untuk mengiklankan produk Tiger Balm keluaran beliau. Sebagai salah satu akhbar harian Bahasa Cina yang unggul di Singapura, ia mengangkat sentimen setia kepada China dan *Kuomintang* (Parti Nasionalis Cina), di mana Chiang Kai-shek selaku ketua parti tersebut telah menulis judul utama (masthead) akhbar itu untuk keluarannya yang pertama.

தொழிலதிபர் ஆவ் பூன் ஹாவ், தனது டைகர் பாம் வணிக நிறுவனத்தின் பொருள்களை விளம்பரம் செய்வதற்காக 1929-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் நாள் சின் ச்யூ ஜிட் போ என்ற சீனப் பத்திரிகையைத் தொடங்கினார். சிங்கப்பூரின் முதன்மையான சீன நாளிதழ்களில் ஒன்றான இப்பத்திரிகை, சீனா, குவோமின்டாங் (சீன தேசிய கட்சி) ஆகியவை குறித்து நாட்டுப்பற்று மிக்க உணர்வுகளை வெளிப்படுத்தியது. சீன தேசிய கட்சியின் தலைவரான சியாங் காய் ஷெக் இப்பத்திரிகையின் முதல் பதிப்பில் தலைப்புக் கட்டுரை எழுதியிருந்தார்.

**1929 年 1 月 15 日，商人胡文虎为宣传他的虎标万金油产品，出版了《星洲日报》。作为新加坡的主要华文日报之一，该报宣扬了对中国和国民党的爱国思想。该报的创刊号报头为当时的国民党领袖蒋介石所题。**

# அறிமுகம்

முதன்முதலில் 17-ஆம் நூற்றாண்டில் அச்சிடப்பட்ட நவீன செய்தித்தாள், மக்களின் சுற்றுவட்டாரத்திலும் தொலைதூரத்திலும் நடந்தவை பற்றி அவர்களுக்குத் தகவல் அளித்த ஆகப் பழமையான ஊடகங்களில் ஒன்றாகும். 21-ஆம் நூற்றாண்டில், இணையத்தால் ஊடகத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றத்தைத் தொடர்ந்து, தகவலின் அர்த்தமறிந்து, மதிப்பிட்டு, பயன்படுத்தக்கூடிய ஆற்றல் அத்தியாவசிய வாழ்க்கைத் திறனாகிவிட்டது.

செய்தி காட்சிக்கூடம்: "தலைப்புச் செய்திகளுக்கு அப்பால்" கண்காட்சி, தேசிய நூலகத்தின் செய்தித்தாள் வளங்களின் வாயிலாகத் தகவலையும் ஊடகத்தையும் உய்த்துணர வருகையாளர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய இருவழித்தொடர்புத் தளத்தை வழங்குகிறது. இந்த நிரந்தரக் கண்காட்சி, 1820-களிலிருந்து தொடங்கும் நூலகத்தின் திரட்டிலுள்ள சிங்கப்பூர் செய்தித்தாட்களின் கதைகளை விவரிக்கிறது. பல்வேறு ஊடகங்களின் வாயிலாக சிங்கப்பூர் வரலாற்றுச் சம்பவங்களைப் படைத்து, பொய்ச் செய்திகள் பற்றிய விவரங்களைப் பகிர்கிறது. அதோடு, பரவசமும் திகைப்பும் நிறைந்த செய்தி ஊடக உலகின் மாறுபட்ட அம்சங்களையும் ஆராய்கிறது.

## ஆரம்பகாலப் பதிப்புகள்

*சிங்கப்பூரின் முதல் செய்தித்தாள் சிங்கப்பூர் க்ரோனிகல் அண்ட் கமர்ஷியல் ரெஜிஸ்தர். இது 1824-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதிகார அமைப்புகள் அனுமதியளிக்காத வெளியீடுகளுக்குத் தடை விதித்த தடைச்சட்டத்தின் காரணமாக, பத்தாண்டுகளுக்கு மேலாக இது மட்டுமே ஒரே உள்ளூர் செய்தித்தாளாக இருந்தது. இந்தச் சட்டம் 1835-ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டபோது, சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ் (1835), த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் (1845) போன்ற மற்ற செய்தித்தாள் வெளியீட்டாளர்களுக்குச் சந்தை திறந்துவிடப்பட்டது. வட்டாரமொழி செய்தித்தாட்களான சீன மொழி லாட் பாவ் (1881), மலாய் மொழி ஜாவி பெரனக்கான் (1876), தமிழ் மொழி சிங்கை நேசன் (1887) ஆகியன, சிங்கப்பூரிலும் மலாயாவிலும் வாழ்ந்துவந்த பல்வேறு இனச் சமூகங்களுக்குத் தொழில் தகவலும் சமூகச் செய்திகளும் அளித்தன. இந்தச் செய்தித்தாட்கள், தத்தம் சமூகங்களின் அக்கறைகளிலும் நலன்களிலும் கவனம் செலுத்தியதோடு, முக்கியமான சமூக விவகாரங்களிலும் குரல்கொடுத்தன.*


THE SINGAPORE FREE PRESS
AND
MERCANTILE ADVERTISER.
No. 14. THURSDAY MORNING, 7th JANUARY 1836. Vol. I.

## சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ் அண்ட் மெர்கன்டைல் அட்வர்டைசர்

7 ஜனவரி 1836

*சிங்கப்பூர்: சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ்*

சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ் அண்ட் மெர்கன்டைல் அட்வர்டைசர் செய்தித்தாள் முதன்முதலாக 8 அக்டோபர் 1835 அன்று வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் க்ரோனிகல் செய்தித்தாளுக்குப் பிறகு இதுவே சிங்கப்பூரின் இரண்டாவது ஆங்கில மொழி செய்தித்தாளாக இருந்தது. தடைச் சட்டம் ரத்தானதைக் குறிக்கும் வகையில் செய்தித்தாளுக்கு இந்தப் பெயர் வைக்கப்பட்டது. செய்தித்தாளின் வெளியீடு 1869-ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட போதிலும், 1884-ஆம் ஆண்டில் மறுபடியும் தொடரப்பட்டது. இந்தச் செய்தித்தாளை 1946-ஆம் ஆண்டில் த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் வாங்கிக் கொண்டது.


南洋商報
THE NANYANG SIANG PAU

## நன்யாங் சியாங் பாவ்

10 ஏப்ரல் 1941

*சிங்கப்பூர்: நன்யாங் பிரஸ் லிமிடெட்*

நன்யாங் சியாங் பாவ் சீன மொழி செய்தித்தாள், 6 செப்டம்பர் 1923 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது. தொழிலதிபரும் கொடை வள்ளலுமான டான் கா கீ, வணிகத்தையும் கல்வியையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தச் செய்தித்தாளைத் தொடங்கி வைத்தார். சீனாவையும் சிங்கப்பூரையும் சேர்ந்த ஃபூ வூமன், ஹூ யூஜி போன்ற பிரபலமான சீன எழுத்தாளர்களும் செய்தியாளர்களும் இந்தச் செய்தித்தாளில் வேலை செய்தனர். 16 மார்ச் 1983 அன்று, மற்றொரு முன்னணி சீன செய்தித்தாளான சின் சியூ ஜிட் போ-வுடன் நன்யாங் சியாங் பாவ் இணைந்து, நன்யாங் சிங்ஜாவ் லியன்ஹ சாவ்பாவ் (பிற்பாடு லியன்ஹ சாவ்பாவ் என சுருக்கமாக்கப்பட்டது), காலைப் பதிப்பாகவும், லியன்ஹ வான்பாவ் மாலைப் பதிப்பாகவும் வெளியிடப்பட்டன.


اوتوسن ملايو
UTUSAN MELAYU - Leading Malay Daily Newspaper in Malaya

உத்துசான் மலாயு
26 செப்டம்பர் 1945
*சிங்கப்பூர்: உத்துசான் மலாயு பிரஸ் லிமிடெட்*

உத்துசான் மலாயு, 29 மே 1939 அன்று, ஜாவி எழுத்துவடிவிலான மலாய் தினசரியாக சிங்கப்பூரில் முதன்முதலில் வெளியிடப்பட்டது. மலாய்க்காரர்கள் முழு உரிமை பெற்று, நிதியளித்து, எழுதிய, முதல் மலாய் செய்தித்தாள் இது என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குமுன், மலாய் செய்தித்தாட்கள் அரபு, இந்தியப் பின்புலங்களைச் சேர்ந்த முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இந்தச் செய்தித்தாளை வழிநடத்திய முக்கியமானவர்களில் ஒருவர் யூசோப் பின் இஷாக். மலாயாவில் பிறந்த சிங்கப்பூரின் முதல் யாங் டி-பெர்துவான் நெகாராவாகவும் (நாட்டுத் தலைவர்), பிற்பாடு அதிபராகவும் இவர் பதவி ஏற்றார்.


தமிழ் முரசு
"TAMIL MURASU" Tri-Weekly.
8 Pages
THE LEADING AND THE MOST INFLUENTIAL TAMIL NEWS PAPER IN MALAYA.
அம்மை ஆஸ்பத்திரியில் எனது அனுபவம்.
குல்பஹார்

தமிழ் முரசு
5 மே 1936
*சிங்கப்பூர்: சாரங்கபாணி*

தமிழ் முரசு செய்தித்தாள் முதன்முதலாக 6 ஜூலை 1935 அன்று வெளியீடு கண்டது. சிங்கப்பூரிலிருந்த ஆகப் பழமையான தமிழ்ச் சங்கங்களில் ஒன்றான தமிழ்ச் சீர்திருத்தச் சங்கம் நடத்திய இந்தச் செய்தித்தாள், சமூக, பொருளியல் சீர்திருத்தங்களைப் பரப்பும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் நிலைமை பற்றியும் உரிமைகள் பற்றியும் அக்கறை கொண்ட தமிழ் முரசு, சமூக, பொருளியல் மாற்றங்களின்வழி தமிழர்களை முன்னேற்ற வேண்டிய அவசியம் பற்றி அடிக்கடி கட்டுரைகள் வெளியிட்டது.

## ஒவ்வொரு கதைக்குப் பின்னால்

ஒரு செய்தியை மேலோட்டமாகப் பார்க்கும்போது, அது ஒரு சம்பவத்தைப் பற்றி அல்லது உலக நடப்பைப் பற்றி தகவல் அளிப்பதாகத் தோன்றும். ஆனால், ஒரு செய்தி பலவகையான தாக்கங்களுக்கு ஆட்படுகிறது என்பதே உண்மை. செய்தித்தாளின் அரசியல் தொடர்புகள், நிதியளிக்கும் மூலம், வாசகர்களின் எதிர்பார்ப்புகள், செய்தித்தாளின் நோக்கங்கள், செய்தியாளர்களின் தனிப்பட்ட கருத்துகள், சமுதாயத்தின் நடப்புச் சிந்தனைகள் போன்றவை அவற்றுள் அடங்கும். இவற்றைப் புரிந்துகொள்வதன்வழி, வாசகர்கள் செய்திகளை மேலும் உய்த்துணரவும் கூர்ந்தாராயவும் இயலும். இந்தப் பல்லூடகக் கண்காட்சி, சிங்கப்பூரின் வரலாற்று நிகழ்வுகளையும், அவை செய்தித்தாட்களிலும் மற்ற ஊடகங்களிலும் எவ்வாறு படைக்கப்பட்டன என்பதையும் காட்டுகிறது. இந்நிகழ்வுகளை ஊடகங்கள் வெவ்வேறு விதமாகப் படைத்து, அர்த்தமளித்தன. அவற்றை ஒப்பிடுவதன்வழி, செய்தியாளரின் பார்வையிலிருந்து வரலாற்றைப் புரிந்துகொள்வதோடு, ஊடகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.


THE SINGAPORE NAVAL BASE Supplement

Singapore Free Press

THE NEW SINGAPORE.

By The Editor.

The Biggest Naval Dock In The World

Story Of The Naval Base

த சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ் அண்ட் மெர்கன்டைல் அட்வர்டைசர்
14 பிப்ரவரி 1938

## தகர்க்கமுடியாத அரணா அல்லது பரப்புரையா? கடற்படைத் தளத்தின் திறப்பு

இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக, சிங்கப்பூரின் தற்காப்புகள் மிகவும் வலுவானவை எனக் கருதப்பட்டதால், இத்தீவு "தகர்க்கமுடியாத அரண்" என்று பேசப்பட்டது. 1938-ஆம் ஆண்டு செம்பவாங்கில் திறக்கப்பட்ட கடற்படைத் தளம் ஒரு வரலாற்று மைல்கல் என்றும், அதுவே உலகில் ஆகப்பெரியது என்றும், அதிநவீன வசதிகளைக் கொண்டது என்றும் உள்ளூர் ஆங்கிலச் செய்தித்தாட்கள் எழுதின. எனவே, சிங்கப்பூர் 1942-ஆம் ஆண்டில் ஜப்பானியரின் பிடியில் சிக்கியபோது, இந்நாடு தகர்த்தமுடியாத அரண் என்ற நம்பிக்கை சுக்குநூறாகச் சிதறியது.



THE SHONAN TIMES

No. 1. FEBRUARY 20, SHOWA 17. 5 cents.

JAPAN'S POSITION IMPREGNABLE

Effect Of Fall Of Singapore

Gen. Shunroku Hata Issues Verbal Statement

British Reverses In Malaya

Political Blunder In Colonies

British Aircraft Carrier Damaged

Australia Further Isolated

Enemy Destroyer Sunk Yesterday

ENEMY HANGARS DESTROYED

THE SHONAN TIMES

OUR FIRST ISSUE

To Our Friends—The People Of Malaya

ஷியோனான் டைம்ஸ்
20 பிப்ரவரி 1942

## வென்றவரின் அழுகையும் தோற்றவரின் புலம்பலும்: சிங்கப்பூரின் வீழ்ச்சி

சிங்கப்பூர் 1942-ஆம் ஆண்டில் ஜப்பானிய ராணுவத்தின் பிடியில் சிக்கிய சம்பவம், பிரிட்டிஷ் ராணுவ வரலாற்றின் மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பிரிட்டிஷ் அரசாட்சியின் முக்கிய அங்கமாகக் கருதப்பட்ட சிங்கப்பூரை யாராலும் தாக்கமுடியாது என நம்பப்பட்டது. ஜப்பானியரை ஆதரித்த செய்தித்தாட்கள், பல நூற்றாண்டுகளாக நீடித்துவந்த மேற்கத்திய நாடுகளின் தன்னலச் சுரண்டலிலிருந்து ஆசியர்களை விடுவிக்கும் புதிய யுகத்தைத் தொடங்கிவைத்த "திருப்புமுனை" நிகழ்வாக சிங்கப்பூரின் வீழ்ச்சியை வர்ணித்தன. "மாபெரும் கிழக்காசிய இணைவள மண்டலத்தை" உருவாக்கும் ஜப்பானின் யோசனையை இத்தகைய செய்திகள் ஆதரித்தன. அதே சமயத்தில், சிங்கப்பூர் "தகர்க்கமுடியாத அரண்" என்ற கண்ணோட்டத்தை ஒரு பரப்புரை என்று கூறி மேற்கத்திய செய்தித்தாட்கள் சட்டென நிராகரித்தன.



Bertha Knelt Before Virgin Mary Statue

Standard Woman Correspondent

BERTHA HERTOGH knelt before the statue of the Virgin Mary, beside her mother, in the Convent of the Good Shepherd, Thomson Road, yesterday. She did this of her own free will.

200 CARDS REPLACED

Reporters See Maria In New Role

FOR SALE

Skyscraper Dispute

சிங்கப்பூர் ஸ்டாண்டர்ட்
5 டிசம்பர் 1950

## பரபரப்பான சம்பவம்: மரியா ஹெர்டாக் காப்புரிமை போராட்டம்

மரியா ஹெர்டாக் என்ற 13 வயது டச்சு யுரேசிய சிறுமியின் காப்புரிமை போராட்டம், 1950-ல் உலகின் கவனத்தை ஈர்த்தது. சிங்கப்பூர், நெதர்லாந்து, அமெரிக்க செய்தித்தாட்கள் பரபரப்பூட்டும் செய்திகளை வெளியிட்டு, உணர்ச்சிகளைத் தூண்டும் படங்களையும் தலைப்புகளையும், துல்லியமற்ற தகவல்களையும் பரப்பி, உலகின் கவனத்தை ஈர்த்தன. இந்தச் சட்ட வழக்கினால், காலனித்துவ ஆட்சி எதிர்ப்பு உணர்வுகள் தூண்டப்பட்டன. சமய வேறுபாடுகளும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டன. முடிவில் இவை கலவரங்களுக்கு வழிவிட்டன.


Singapore Standard

Strikers, Students Run Riot Outside Alexandra Bus Depot

.S.C. BATTERED TO DEATH

Student Killed, 12 Injured

RIOT SQUAD CRACKS DOWN

Troops Alerted In Johore And Blakan Mati

Big Bandit Training Camp Found Near Thai Border

But No Trace Of Chin Peng Yet

Investors Hesitant On Shares

Black Object Speeds Over Batu Pahat

THAIS GET MALAYAN EQUIPMENT

Death Roll Now 133

சிங்கப்பூர் ஸ்டாண்டர்ட்
13 மே 1955

## கம்யூனிஸ்ட் கிளர்ச்சியா அல்லது தொழில்துறை சர்ச்சையா? ஹாக் லீ பேருந்து கலவரம்

1955-ஆம் ஆண்டில் நடந்த ஹாக் லீ பேருந்து கலவரம், சிங்கப்பூர் வரலாற்றில் நடந்த ஆகக் கொடுமையான கலவரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பேருந்து ஊழியர்களுக்கும் ஹாக் லீ ஒருங்கிணைந்த பேருந்து நிறுவனத்தின் நிர்வாகத்தினருக்கும் இடையிலான சர்ச்சையால் கலவரம் மூண்டது. கலவரத்திற்கான காரணம் குறித்து உள்ளூர் செய்தித்தாட்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தன. கலவரத்தை கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் தூண்டியதாக ஆங்கிலச் செய்தித்தாள் கைகாட்டியது. ஊழியர்கள் மோசமாக நடத்தப்பட்டதும், காவல்துறையினர் செய்த கொடுமையும் கலவரத்திற்கான காரணங்கள் என சீன செய்தித்தாள் குறிப்பிட்டது.


AVERAGE DAILY CERTIFIED SALE EXCEEDS 150,000

The Straits Times

PAGE ONE LEADER

Now look to the future

Tengku pledges support for admission to Commonwealth and United Nations

What it means—at a glance

Singapore is out

SINGAPORE today separated from Malaysia, following an amendment to the Constitution approved unanimously by both Houses of Parliament under a certificate of urgency.

Tengku: It was my idea...

Bitter battle

Secret signing

STOP PRESS

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
10 ஆகஸ்ட் 1965

## நெருக்கடியான தருணமா அல்லது வழக்கமான வாழ்க்கையா? மலேசியாவிலிருந்து சிங்கப்பூரின் பிரிவினை

1965 ஆகஸ்ட் 9-ஆம் தேதி, மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரியும் செய்தியை அறிந்து சிங்கப்பூரர்கள் அதிர்ச்சி அடைந்தனர். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச்செய்தியை வெளியிட்ட உள்ளூர் செய்தித்தாட்களின் கண்ணோட்டமும் உணர்வுகளும் மாறுபட்டிருந்தன. த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், பெரித்தா ஹரியான் ஆகிய இரு செய்தித்தாட்களும் மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் செய்தியாளர் கூட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தன. அதே சமயத்தில், நன்யாங் சியாங் பாவ் செய்தித்தாளில் லீ குவான் இயூவின் கருத்துகளே பெரும்பகுதி இடம்பெற்றன. இந்தப் பிரிவைத் “துயரச் செய்தி” என்று த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் வர்ணித்த போதிலும், சீன செய்தித்தாள் உணர்ச்சிவசப்படாத, கிட்டத்தட்ட நம்பிக்கையளிக்கும் தொனியில் செய்திகளை வெளியிட்டது.



**Move taken as used gum disrupted MRT services**

# Chewing gum to be banned

By Dominic Nathan

CHEWING gum will be banned in Singapore from Friday.

In a short statement issued yesterday, the Environment Ministry said that the ban was imposed because spent chewing gum had disrupted MRT train operations.

Also, it added, chewing gum litter had been a peren- gum or anything similar prepared from a gum base of vegetable or synthetic origin, would come under the ban.

He added, however, that existing stocks of of the products could be re-exported.

On the penalties for violating the ban, he said that anyone convicted of selling chewing gum from Friday could be fined up to $2,000.

For importing the substance, a first conviction car-

Housewife Mary Yong, 32, said: "I am all for the ban. It is a dirty habit, especially when people just spit out the gum or stick it to the back of chairs in cinemas or bus seats."

Agreeing, Mr Tang Cheong Soon, 32, a civil servant, said: "If you cannot import, make or sell chewing gum, then the littering and mischief problem is removed. Banning it solves the problem effectively

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
4 ஜனவரி 1992

## நடைமுறைக்கேற்ற வாதமா அல்லது அரவணைப்புவாதமா? மெல்லும் சவ்வுமிட்டாய்க்குத் தடை

30 டிசம்பர் 1991 அன்று, மெல்லும் சவ்வுமிட்டாயின் இறக்குமதி, விற்பனை, உற்பத்தி ஆகியவற்றுக்குத் தடை விதிப்பதாக சிங்கப்பூர் அரசாங்கம் அறிவித்தது. இந்த வித்தியாசமான சட்டத்திற்கு வெவ்வேறு உள்ளூர் செய்தித்தாட்கள் எவ்வாறு வெவ்வேறு வகையில் அர்த்தம் கற்பித்தன என்பதை அவற்றில் வெளிவந்த கருத்துரைகளை ஆராய்ந்து அறியலாம். இந்தத் தடை வெகு கடுமையானது என்ற கருத்தை வெளிப்படுத்திய கடிதங்களையும் தலையங்கங்களையும் த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் வெளியிட்டது. மலாய், சீன செய்தித்தாட்கள், தீராத குப்பை போடும் பிரச்சனைக்கான பயன்மிக்கத் தீர்வாகத் தடையைக் கருதின. குற்றம் புரிவோருக்குக் கடுமையான தண்டனைகள் விதிப்பதையும், அறிவூட்டும் இயக்கங்கள் நடத்துவதையும்விட இதுவே அதிக பயன்மிக்கதாக இருக்கக்கூடும் என்று அவை கருத்துரைத்தன.



COMMENT/ANALYSIS

**Asad Latif replies to the commentaries . . .**

# It's all invectives and not cold logic



த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
1 மே 1994

## தலையங்கத்தின் சக்தி: மைக்கல் ஃபே சம்பவம்

அமெரிக்க இளைஞர் மைக்கல் ஃபே-வுக்கு சிங்கப்பூரில் 1994 இல் சிறைத் தண்டனையும் பிரம்படியும் விதிக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. கிழக்கத்திய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான கலாசார, விழுமிய, மனப்பாங்கு வேறுபாடுகளைப் பற்றிய விவாதமாக இவ்வழக்கு விரைவில் உருவெடுத்தது. இதுபற்றிய செய்திகள், பொதுமக்களின் கண்ணோட்டத்திற்கு வடிவம் கொடுப்பதில் செய்தி தலையங்கங்களுக்கு உள்ள சக்தியை எடுத்துக்காட்டியது. அமெரிக்க செய்தித்தாட்களின் தலையங்கங்கள், ஃபே-யை மனித உரிமை மீறலுக்கு இலக்கானவராகப் படம்பிடித்துக் காட்டின. அதே சமயத்தில், சிங்கப்பூர் செய்தித்தாட்கள் தண்டனையையும் சட்டத்தை நிலைநாட்ட நாட்டுக்குள்ள உரிமையைத் தற்காத்தன. சிங்கப்பூர் “கடுமையான சட்டத்திட்டங்களை நிலைநாட்டும் நாடு” என்ற நற்பெயர் உலகெங்கிலும் பரவுவதற்கு இந்த வழக்கைப் பற்றி அனைத்துலக ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் ஒரு காரணம் எனலாம்.



THE STRAITS TIMES

# Yes to two mega resorts

CREATING THE BUZZ OF A GLOBAL CITY

MARINA BAYFRONT

SENTOSA

35,000 new jobs and huge gains to economy

த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
19 ஏப்ரல் 2005

## சரியான உத்தியா அல்லது சீர்கேடா? சூதாட்டக்கூட விவாதம்

சூதாட்டக் கூடங்களை அறிமுகப்படுத்த சிங்கப்பூர் எடுத்த தீர்மானம், 2004-க்கும் 2005-க்கும் இடையில் ஊடகங்களில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டன. பல்வேறு செய்தித்தாட்களும் இச்செய்தியை வெளியிட்ட கோணங்களில், மாறுபட்ட கண்ணோட்டங்கள் வெளிப்பட்டன. உள்ளூர் செய்தித்தாட்கள், சூதாட்டக் கூடங்களின் பொருளியல் ஆதாயத்தையும் சமூகக் கேட்டையும் எடைபோட்டுப் பார்ப்பதில் கவனம் செலுத்தின. அனைத்துலக ஊடகங்களோ, சிங்கப்பூரின் அரசியல் சூழல் அதிக முற்போக்காகி வருவதைக் கோடிகாட்டின.

## மெய்யா பொய்யா?

இணையத்தின் வரவினால், பொய்ச் செய்திகள் உலகளாவிய மிரட்டலாகத் தலையெடுத்துள்ளன. குறிப்பாக இவை புதிய ஊடகத் தளங்களில் வேகமாகப் பரவுகின்றன. மக்களால் இப்போது மிகக் குறைவான செலவில் அல்லது அறவே செலவில்லாமல் சொந்தமாக எதை வேண்டுமானாலும் வெளியிடவும், தங்களது அடையாளத்தை மூடிமறைக்கவும், பொறுப்பேற்பைத் தவிர்க்கவும் முடிகிறது. இந்நிலையில், கேள்விக்குரிய உள்ளடக்கங்களை எளிதில் உருவாக்கி, பரவலாகப் பரப்பிவிடமுடியும்.

பொய்ச் செய்திகளின் பாதிப்பு ஆழமாகவும் மோசமாகவும் இருக்கக்கூடும். பொய்ச் செய்திகளால் பொதுமக்களிடையில் பீதியும் சமூகச் சீர்குலைவும் ஏற்பட்டுள்ளன. இந்தப் பாதிப்புகளைச் சரிசெய்வதற்குப் பல சமயங்களில் ஏகப்பட்ட வளங்கள் வீணாகியுள்ளன. பொய்ச் செய்திகளால் தனிமனிதர்கள், அமைப்புகள் ஆகியவற்றின் நன்மதிப்பும் கெடக்கூடும். அதேபோல, இச்செய்திகள் அமைப்புகள் மீதான நம்பிக்கையைக் குலைத்து, இன அல்லது சமயப் பூசலை விதைத்து, அரசியல் கிளர்ச்சியையும் தூண்டக்கூடும்.

இங்குள்ள இருவழித்தொடர்புப் புதிர், சிங்கப்பூரிலும் வெளிநாடுகளிலும் நிகழ்ந்த பொய்ச் செய்தி சம்பவங்களின் அடிப்படையிலானது. பொய்ச் செய்திகளைப் பற்றிய முக்கிய விவரங்கள், அதன் பாதிப்புகள், பொய்ச் செய்திகளின் பரவலை ஒடுக்குவதற்கு நாம் செய்யக்கூடியவை ஆகியவற்றைக் கற்பிக்கும் வகையில் புதிர் வடிவமைக்கப்பட்டுள்ளது.



THE SUN
STUFFED BY TURKEY More than 700,000 Turks 'will flock to live and work in Britain after country joins EU'

Migration Watch said that if Brits vote to Remain our population will soar towards 80 million

MORE THAN 700,000 Turks could come to live and work in Britain by 2035 – a think tank claims today in a dramatic EU Referendum "wake up call".

Migration Watch says 100,000 Turkish migrants will be coming to the UK every year once the country becomes a full EU member.

## பிரெக்சிட் பொது வாக்கெடுப்பின்போது குடியேறிகளுக்கு எதிராகத் தவறான தகவல்

பிரிட்டனில் 2016-ஆம் ஆண்டு நடந்த பிரெக்சிட் பொது வாக்கெடுப்பைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணை ஓர் உண்மையைக் கண்டறிந்தது. பிரெக்சிட் திட்டத்தை ஆதரிக்குமாறு வாக்காளர்களைத் தூண்டும் நோக்கத்துடன், ஃபேஸ்புக்கில் தவறான தகவல்கள் உள்ளடங்கிய விளம்பரங்கள் தொடராக வெளியிடப்பட்டதாகத் தெரியவந்தது. உணர்ச்சிகளைத் தூண்டவல்ல விவகாரங்களான குடிநுழைவு, விலங்கு உரிமை போன்றவற்றில் இந்த விளம்பரங்கள் கவனம் செலுத்தின. வேலை இழப்பு போன்ற அச்சங்களை இந்த விளம்பரங்கள் மிகைப்படுத்தின. துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரவிருப்பதாகவும், பிரிட்டனுக்கு 700,000 துருக்கியர்கள் வரவிருப்பதாகவும் ஒரு விளம்பரம் கோடிகாட்டியது.



## பொங்கோல் வாட்டர்வே டெரசஸ் இடிந்து விழுந்ததாகப் பொய்ச் செய்தி

2016 நவம்பர் மாதம், பொங்கோல் வாட்டர்வே டெரசஸில் உள்ள விருப்பதிற்கேற்ப கட்டப்பட்ட வீடமைப்பு வளர்ச்சிக் கழக அடுக்குமாடிக் கட்டடத்தின் மேல்மாடி இடிந்து விழுந்துவிட்டதாக மாற்றுச் செய்தித்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது. அதோடு, சேதமடைந்ததாகக் கூறப்பட்ட கட்டடத்தின் படத்தையும் வெளியிட்டது. இச்செய்தி உடனடியாகச் சமூக ஊடகத்தில் தீயெனப் பரவியது. சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையும் வீடமைப்பு வளர்ச்சிக் கழகமும் அங்கு சென்று விசாரணை நடத்தி, அச்செய்தி பொய் என்பதைத் தெளிவுபடுத்தின.




## வாட்ஸ்அப்பினால் இந்தியாவில் சட்டத்தைக் கையிலெடுத்துக்கொண்ட மக்கள்

உலகிலேயே இந்தியாவில்தான் வாட்ஸ்அப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை ஆக அதிகமாக உள்ளது. 2017-2018 வாக்கில், பிச்சைக்காரர்களும் கூலித்தொழிலாளர்களும் உண்மையில் குற்றவாளிகள் என்ற பொய்யான செய்தி வாட்ஸ்அப்பில் பரப்பப்பட்டது. இதனால், மக்கள் சட்டத்தைத் தங்கள் கையிலெடுத்துக்கொண்டு, அவர்களைக் குறிவைத்துத் தாக்கத் தொடங்கியதில் பலர் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து, இந்தியாவில் பொய்ச் செய்திக்கு எதிரான விளம்பர இயக்கத்தை வாட்ஸ்அப் தொடங்கியது. அதோடு, ஒரு செய்தியை ஒரே சமயத்தில் அதிகபட்சம் ஐவருக்கு மட்டுமே அனுப்பலாம் என்ற கட்டுப்பாட்டையும் விதித்தது.




## முதலீட்டு மோசடிகள்

அண்மை ஆண்டுகளில், பிட்காய்ன் நாணய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசாங்க அமைச்சர்கள், கோடீஸ்வரர்கள், பிரபலங்கள் உள்ளிட்ட பல முன்னணி சிங்கப்பூரர்கள் பொய்யான செய்திகளில் பயன்படுத்தப்பட்டனர். அவர்களது புகைப்படங்கள், உள்ளூர் செய்தி நிறுவனங்களின் சின்னங்கள் ஆகியவற்றோடு, பரபரப்பான தலைப்புகளும் பொய்யான வாசகங்களும் இச்செய்திகளில் இடம்பெற்றன. சிங்கப்பூர் நாணய ஆணையமும் காவல்துறையும் எச்சரிக்கைகள் வெளியிட்டும், ஊடகங்கள் இதுபற்றி செய்திகள் வெளியிட்டும்கூட, சிங்கப்பூரர்கள் சிலர் இந்த மோசடிகளுக்கு இலக்கானார்கள்.

## கூடியத் தகவல்கள்!



செய்தித்தாட்கள் செய்திகளை மட்டுமல்லாது விளம்பரங்கள், பொழுதுபோக்குத் தகவல்கள், உணவு, ஊடகக் கருத்தாய்வுகள், புகைப்படத் தொகுப்புகள், சமூக நோக்கம் கொண்ட சிறப்புக் கட்டுரைகள், சமையல் குறிப்புகள், பிரச்சனை உள்ளவர்களுக்கு ஆலோசனை அளிக்கும் பகுதிகள் என ஏகப்பட்ட தகவல்களையும் வழங்குகின்றன. இந்தப் பகுதியில், செய்தித்தாட்களின் பல்வேறு பகுதிகள் இடம்பெறுகின்றன. பரவசமூட்டும் ஊடக உலகின் பன்முகங்களை இப்பகுதி ஆராய்கிறது. இந்தக் காட்சிப்பகுதி இடையிடையில் மாற்றப்படும்.

## அனைத்தும் வாசித்து அறியலாம்




தேசிய நூலகத்தின் மின்னிலக்கத் திரட்டிலுள்ள வரலாற்று, சமகாலச் செய்தித்தாட்களில் அண்மைத் தலைப்புச்செய்திகள் முதல் அக்காலச் செய்திகள் வரை அனைத்தையும் வாசித்து அறியலாம். 1827 முதல் வெளியிடப்பட்ட சிங்கப்பூர் செய்தித்தாட்களின் வளமிக்க இணைய ஆவணங்களை NewspaperSG-ல் கண்டறியலாம். அதோடு, சிங்கப்பூரிலும் உலகிலும் தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் செய்தித்தாட்களையும் PressReader-ல் வாசிக்கலாம்.

## தலைப்புச்செய்தியில் இடம்பெறுங்கள்!




செய்தித்தாளின் முதல் பக்கத்தில் தலைப்புச்செய்தியாக இடம்பெறும் கனவை நனவாக்குங்கள்! இந்த இருவழித்தொடர்புக் கூடத்தில் புகைப்படம் எடுத்து தலைப்புச்செய்தியை உருவாக்கி, உங்கள் வருகையின் நினைவாக ஒரு மின் நினைவுப்பொருளை எடுத்துச்செல்லுங்கள்.

கண்காட்சிக்கு வருகை அளித்தமைக்கு நன்றி!

எதிர்வரும் நிகழ்ச்சிகள் பற்றி விவரம் அறிய **go.gov.sg/tng-exh** இணையத்தளத்திற்குச் செல்லவும்.

1827 இல் இருந்து வெளிவந்த சிங்கப்பூர் செய்தித்தாள்கள் பற்றி அறிய எங்களின் வளமிக்க **NewspaperSG** என்ற தரவுத்தளத்திற்கு வருகை தரவும்.

இக்கண்காட்சியைப் படைப்போர்

NLB | National Library Singapore